# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்ட அறிக்கை 2025.09.18

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் புரட்டாதி மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் அவர்களின் தலைமையில் 2025.09.18ம் திகதி வியாழக்கிழமை காலை 09.30 மணிக்கு தலைமையலுவலக சபா மண்டபத்தில் ஒரு நிமிட மௌன வணக்கத்துடன் ஆரம்பமானது. அவ்வேளையில் கீழ்காணும் கௌரவ உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் ஆகியோர் சமூகமாகியிருந்தனர்.

1. கௌரவ உறுப்பினர் தேவச்சந்திரன் வஜிந்தன்
2. கௌரவ உறுப்பினர் குலத்துங்கம் வில்வராசா
3. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா
4. கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ்
5. கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன்
6. கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா
7. கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார்
8. கௌரவ உறுப்பினர் முத்தலிப் ரகுநாதன்
9. கௌரவ உறுப்பினர் வித்தியா கிருபாகரன்
10. கௌரவ உறுப்பினர் பாலச்சந்திரன் லஜிதரன்
11. கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன்
12. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
13. கௌரவ உறுப்பினர் மேகலா திருஞானசம்பந்தர்
14. கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன்
15. கௌரவ உறுப்பினர் சந்திரன் தயானி
16. கௌரவ உறுப்பினர் இரத்தினம் அனுஷா
17. கௌரவ உறுப்பினர் வயிரவன் தங்கவேல்
18. கௌரவ உறுப்பினர் சுகீர்த்தனா ரவிச்சந்திரன்
19. கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன்
20. கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன்
21. கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா
22. கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி
23. கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன்
24. கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ்
25. கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் இராசேந்திரம்
26. கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன்

எங்களுடைய தாய் மண்ணுக்காகவும் இனத்தின் விடுதலைக்காகவும் மரணித்த தியாகி திலீபன் அவர்களுக்கு ஒரு நிமிட அகவணக்கம் சபையின் கௌரவ உறுப்பினர்களால் செலுத்தப்பட்டது. குறித்த நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயக கட்சி கௌரவ உறுப்பினர்கள் தாங்கள் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவித்தார்கள்.

மேலும் கடந்த சபைக்காலத்தின் சபையின் உறுப்பினராகவிருந்த அமரர் சுப்பையா பத்மநாதன் அவர்களுக்கும் ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

- கௌரவ தவிசாளர் தனது தலைமையுரையிலே இன்றைய சபையின் அமர்வுக்கு வருகை தந்துள்ள சபையினுடைய கௌரவ உப தவிசாளர் மற்றும் சபையின் கௌரவ உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் காலை நேர வணக்கத்தினை தெரிவித்து இக்கூட்டமானது சபையின் நான்காவது கூட்டமெனவும் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் எமது பிரதேசத்தினுடைய எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகளும் ஏனைய செயற்பாடுகளும் அனைவரது ஒத்துழைப்போடும் விரைவான செயற்பாட்டோடும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எங்களால் முன் வைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் அமைச்சுக்களின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதில் சில வீதிகளுக்கு அனுமதிகள் கிடைக்கப்பெற்று மாவட்ட செயலகத்தால் அவ் வேலைகளுக்கு கேள்வி கோரி நிறைவேற்றப்படவேண்டியுள்ளதால் அவ் வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது. அது விரைவாக ஆரம்பித்தால் அனைத்து கௌரவ உறுப்பினர்களினதும் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர்களான வன்னியசிங்கம் பிரபாகரன், செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் மு.ப 09.40 மணிக்கு வருகை தந்தார்கள்.

- இன்றைய அமர்வுக்கு எமது சபையின் கௌரவ உறுப்பினர் சிவசுப்பிரமணியம் சீத்தா அவர்கள் சுகயீனம் காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்க இயலவில்லை என்றும் தனது விடுமுறையினை அனுமதிக்குமாறு கடித மூலம் அறியத்தந்துள்ளார். குறித்த கௌரவ உறுப்பினர் சிவசுப்பிரமணியம் சீத்தா அவர்களின் விடுமுறையினை அனுமதிப்பதற்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் சிவசுப்பிரமணியம் சீத்தா அவர்களின் விடுமுறையினை அனுமதிக்கலாமென கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

❖ கௌரவ உறுப்பினர்களான ஆனந்தராசா உதயசங்கர், சுரேகா கோகுலன் அவர்கள் மு.ப 09.43 மணிக்கு வருகை தந்தார்கள்.

○ தொடர்ந்து நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் 20.08.2025 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கையை அங்கீகரிக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களினால் கோரப்பட்டது.

○ 20.08.2025 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வயிரவன் தங்கவேல் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ 2025.08.27 ம் திகதி நடைபெற்ற நிதிக்குழுக் கூட்டத்தின் சிபாரிசிற்கமைய கொடுப்பனவுகள் விபரம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | நகுலேஸ்வரா சன சமூக நிலையம்,<br>மாவிட்டபுர வீதி,<br>கீரிமலை | Construction of Soakage pit at Ammachi Building Keerimalai. | Rs 1,261,755.61 |
| 02 | செயலாளர்,<br>வலிவடக்கு பிரதேச சபை,<br>காங்கேசன்துறை. | PSDG நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Construction of Drainage at Sathanantha School lane in Alaveddy வேலைக்கு முற்பணமாக வழங்கப்பட்ட தொகையினை சீர் செய்யும் வகையால் | Rs 4,450,677.74 |

| | | | |
|---|---|---|---|
| 03 | Metropolitan Technologies (Pvt) Ltd. | Tonner கொள்வனவிற்கான கொடுப்பனவு | Rs 710,891.00 |
| 04 | Popular Motor Stores, Jaffna. | Tyre கொள்வனவிற்கான கொடுப்பனவு | Rs 311,600.00 |
| 05 | RK Electricals, Mallakam. | கொள்வனவு செய்த LED Bulb மற்றும் Driver ற்கான கொடுப்பனவு | Rs 415,000.00 |
| 06 | Metropolitan Technologies (Pvt) Ltd. | Tonner கொள்வனவிற்கான கொடுப்பனவு | Rs 320,370.00 |
| 07 | Metropolitan Technologies (Pvt) Ltd. | Tonner கொள்வனவிற்கான கொடுப்பனவு | Rs 551,060.00 |
| 08 | விவேகானந்தா சன சமூக நிலையம் | Reconstruction of Kadduvan Muththumari Amman Kovil Road முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 910,523.97 |

***தீர்மான இல :- 01/2025.09.18***

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | நகுலேஸ்வரா சன சமூக நிலையம், மாவிட்டபுர வீதி, கீரிமலை | Construction of Soakage pit at Ammachi Building Keerimalai. | Rs 1,261,755.61 |
| 02 | செயலாளர், வலிவடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை. | PSDG நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Construction of Drainage at Sathanantha School lane in Alaveddy வேலைக்கு முற்பணமாக வழங்கப்பட்ட தொகையினை சீர் செய்யும் வகையால் | Rs 4,450,677.74 |
| 03 | Metropolitan Technologies (Pvt) Ltd. | Tonner கொள்வனவிற்கான கொடுப்பனவு | Rs 710,891.00 |
| 04 | Popular Motor Stores, Jaffna. | Tyre கொள்வனவிற்கான கொடுப்பனவு | Rs 311,600.00 |
| 05 | RK Electricals, Mallakam. | கொள்வனவு செய்த LED Bulb மற்றும் Driver ற்கான கொடுப்பனவு | Rs 415,000.00 |
| 06 | Metropolitan Technologies (Pvt) Ltd. | Tonner கொள்வனவிற்கான கொடுப்பனவு | Rs 320,370.00 |
| 07 | Metropolitan Technologies (Pvt) Ltd. | Tonner கொள்வனவிற்கான கொடுப்பனவு | Rs 551,060.00 |
| 08 | விவேகானந்தா சன சமூக நிலையம் | Reconstruction of Kadduvan Muththumari Amman Kovil Road முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 910,523.97 |

*மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

- ❖ *கௌரவ உறுப்பினர்களான ஜெகதீஸ்வரி சுதர்சன், ஐயாத்துரை மதூசன் அவர்கள் மு.ப 09.50 மணிக்கு வருகை தந்தார்கள்.*

➢ பிரதேச சபையின் இரண்டாவது வாக்குப்பணமாற்ற வரவுசெலவுத்திட்டம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

<table>
<tr><th colspan="7">இரண்டாவது வாக்குப்பணமாற்ற வரவு செலவுத்திட்டம் - 2025 செப்ரெம்பர்</th></tr>
<tr><th colspan="4">சேமிப்பு</th><th colspan="3">செலவினம்</th></tr>
<tr><th>இல.</th><th>செலவினத் தலைப்பு</th><th>விபரம்</th><th>தொகை</th><th>செலவினத் தலைப்பு</th><th>விபரம்</th><th>தொகை</th></tr>
<tr><td rowspan="2">01</td><td>103-03-02</td><td>எரிபொருளும் உராய்வு நீக்கிகளும்</td><td>200,000.00</td><td rowspan="2">105-05-09</td><td rowspan="2">ஏனையவை (கணக்காய்வுக் கட்டணம், நிகழ்நிலை சேவைகள்,விலைமதிப் பீட்டு திணைக்களக்கட்டணம் , வழக்குச்செலவு,காப்புறுதி, புகைப்பரிசோதனைவரி, ஆதனவரிதொடர்பானவை)</td><td rowspan="2">300,000.00</td></tr>
<tr><td>105-05-02</td><td>தொடர்பிணைப்பு (GPS, தொலைபேசி தபால், விளம்பரம்)</td><td>100,000.00</td></tr>
<tr><td>02</td><td>107-07-09-ii</td><td>ஊழியர் நலன்களுக்கான செயற்றிட்டம் (பாதுகாப்பு அங்கிகள்,பொழுதுபோக்கு)</td><td>150,000.00</td><td>201-01-02</td><td>மேலதிக நேர.விடுமுறை நாட்கொடுப்பனவுகள்/ கழிவுறிஞ்சி உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு</td><td>150,000.00</td></tr>
<tr><td></td><td colspan="2">மொத்தம்</td><td>450,000.00</td><td colspan="2"></td><td>450,000.00</td></tr>
</table>

***தீர்மான இல :-* 02/2025.09.18**

*பிரதேச சபையின் இரண்டாவது வாக்குப்பணமாற்ற வரவுசெலவுத்திட்டம் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

| இரண்டாவது வாக்குப்பணமாற்ற வரவு செலவுத்திட்டம் - 2025 செப்ரெம்பர் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சேமிப்பு | | | | செலவினம் | | |
| **இல.** | **செலவினத் தலைப்பு** | **விபரம்** | **தொகை** | **செலவினத் தலைப்பு** | **விபரம்** | **தொகை** |
| **01** | 103-03-02 | எரிபொருளும் உராய்வு நீக்கிகளும் | 200,000.00 | 105-05-09 | ஏனையவை (கணக்காய்வுக் | 300,000.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 105-05-02 | தொடர்பிணைப்பு (GPS, தொலைபேசி தபால், விளம்பரம்) | 100,000.00 | | கட்டணம், நிகழ்நிலை சேவைகள்,விலைமதிப்பீட்டு திணைக்களக்கட்டணம் , வழக்குச்செலவு,காப்புறுதி, புகைப்பரிசோதனைவரி, ஆதனவரிதொடர்பானவை) | |
| **02** | 107-07-09-ii | ஊழியர் நலன்களுக்கான செயற்றிட்டம் (பாதுகாப்பு அங்கிகள்,பொழுதுபோக்கு) | 150,000.00 | 201-01-02 | மேலதிக நேர.விடுமுறை நாட்கொடுப்பனவுகள்/ கழிவுறிஞ்சி உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு | 150,000.00 |
| | **மொத்தம்** | | **450,000.00** | | | **450,000.00** |

- வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கீழ்வரும் கட்டடங்கள் பாவனைக்கு உகந்ததல்லாத நிலையில் காணப்படுகின்றன.
- காங்கேசன்துறை தலைமை அலுவலக கட்டடம் மற்றும் நூலகக்கட்டடம்
- வல்லை சங்கானை வீதியில் மல்லாகத்தில் அமைந்துள்ள கட்டடம்
- கீரிமலை கடற்கரையில் அமைந்துள்ள இளைப்பாறும் மண்டபம்

எனவே மேற்படி கட்டடங்களை பின்வரும் குழு ஒன்றின் ஊடாக பரிசீலித்து அறிக்கை பெற்று மேலதிக நடவடிக்கையை மேற்கொள்வதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

1) எந்திரி உ. தனஸ்ரீ - எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம் - தலைவர்
2) திரு இ. பகீரதன் - செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, - உறுப்பினர்.
3) திரு இ. சுகர்ணன் - தொழில்நுட்ப உத்தியோகத்தர் வலி வடக்கு பி.ச – உறுப்பினர்.

**தீர்மான இல :- 03/2025.09.18**

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பின்வரும் கட்டடங்கள் பாவனைக்குதவாத நிலையில் காணப்படுகின்றன.

- காங்கேசன்துறை தலைமை அலுவலக கட்டடம் மற்றும் நூலகக்கட்டடம்
- வல்லை சங்கானை வீதியில் மல்லாகத்தில் அமைந்துள்ள கட்டடம்
- கீரிமலை கடற்கரையில் அமைந்துள்ள இளைப்பாறும் மண்டபம்

குறித்த கட்டடங்களை பின்வரும் குழுவினூடாக பரிசீலித்து அறிக்கை பெற்று தொடர்நடவடிக்கை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1) எந்திரி உ. தனஸ்ரீ - எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம் - தலைவர்
2) திரு இ. பகீரதன் - செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, - உறுப்பினர்.
3) திரு இ. சுகர்ணன் - தொழில்நுட்ப உத்தியோகத்தர் வலி வடக்கு பி.ச – உறுப்பினர்.

➢ 2026ஆம் ஆண்டு பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் வாகனத்தரிப்பிடம் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு பின்வரும் கேள்வித் தொகையில் கோருவதற்காக சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | குத்தகைவிபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 56,100.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல – 06 | 1,500.00 | 66,100.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி மாட்டிறைச்சிக்கடை இல – 07 | 1,500.00 | 400,000.00 | 5,000.00 | 1,500.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி பன்றிறைச்சிக் கடை | 1,000.00 | 200,000.00 | 1,000.00 | 1,500.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை | …… | 121,200.00 | 1,000.00 | 1,500.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 3,750.00 | 933,900.00 | 10,000.00 | 1,500.00 |
| 07 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 3,750.00 | 142,850.00 | 1,000.00 | 1,500.00 |
| 08 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 3,750.00 | 585,600.00 | 10,000.00 | 1,500.00 |
| 09 | இறால்மடம் சந்தை | ……… | 35,200.00 | 1,000.00 | 1,500.00 |
| 10 | இறால்மடம் சந்தை கோழிக்கடை | 1,250.00 | 35,450.00 | 1,000.00 | 1,500.00 |
| 11 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 628,820.00 | 10,000.00 | 1,500.00 |
| 12 | கும்பலை சந்தைக்குள் அமைந்துள்ள மாட்டிறைச்சிக்கடை இல 01 | 2,750.00 | 761,340.00 | 10,000.00 | 1,500.00 |
| 13 | கும்பலை சந்தைக்குள் அமைந்துள்ள கோழிக்கடை இல 02 | 2,750.00 | 93,950.00 | 1,000.00 | 1,500.00 |
| 14 | கும்பலைச்சந்தை | …… | 402,200.00 | 5,000.00 | 1,500.00 |
| 15 | கும்பலைச்சந்தை வாகனத்தரிப்பிடம் | | 23,200.00 | 1,000.00 | 1,500.00 |
| 16 | கணேஸ்வரம் சந்தை | ……… | 69,900.00 | 1,000.00 | 1,500.00 |
| 17 | கணேஸ்வரம் சந்தைகோழிக் கடை | 1,000.00 | 61,700.00 | 1,000.00 | 1,500.00 |
| தெல்லிப்பளை உப அலுவலகம் | | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை | …….. | 71,500.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தைகோழிக் கடை | 1,050.00 | 93,500.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | கூத்தன்சீமாச் சந்தைகருவாட்டுக்கடை | 1,050.00 | 16,500.00 | 1,000.00 | 1,500.00 |
| 04 | கீரிமலை மரக்கறிச்சந்தை | ……… | 29,700.00 | 1,000.00 | 1,500.00 |
| 05 | வீமன்காமம் பொதுச்சந்தை | ………. | 550,700.00 | 5,000.00 | 1,500.00 |
| 06 | வீமன்காமம் பொதுச்சந்தை வாகனத்தரிப்பிடம் | | 130,850.00 | 1,000.00 | 1,500.00 |
| 07 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 1,498,800.00 | 10,000.00 | 1,500.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 08 | வீமன்காமம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 594,250.00 | 5,000.00 | 1,500.00 |
| 09 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 23,850.00 | 1,000.00 | 1,500.00 |
| 10 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 16,000.00 | 1,000.00 | 1,500.00 |
| **மயிலிட்டி உப அலுவலகம்** | | | | | |
| 01 | குரும்பசிட்டி சந்தை | ......... | 13,200.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | குரும்பசிட்டி கோழிக்கடை | 1,500.00 | 61,100.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | குரும்பசிட்டி மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 501,000.00 | 5,000.00 | 1,500.00 |
| **காங்கேசன்துறை உப அலுவலகம்** | | | | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | ......... | 77,100.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 1,200.00 | 85,450.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | காங்கேசன்துறை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,200.00 | 77,200.00 | 1,000.00 | 1,500.00 |
| 04 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.1 | 1,200.00 | 66,000.00 | 1,000.00 | 1,500.00 |
| 05 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 1,200.00 | 60,000.00 | 1,000.00 | 1,500.00 |

கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் தற்போது பன்றி இறைச்சிக்கடை இயங்குகின்றதா எனக் கேட்டார்.

கௌரவ தவிசாளர் அவர்கள் கடை கேள்வி கோரப்பட்டு வழங்கப்பட்டது எனினும் பின்பு அக்கடை இயங்கவில்லை எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் மல்லாகம் சந்தையினை இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் 2026ம் ஆண்டுக்கான கேள்வியினை கோருவோம் என்றும் கேள்வி கோராத கடைகளினை பின்பு ஆராய்ந்து முடிவெடுப்போம் எனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 04/2025.09.18**

2026 ஆம் ஆண்டு பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் வாகனத்தரிப்பிடம் என்பன குத்தகைக்கு/ வாடகைக்கு பின்வரும் கேள்வித் தொகையில் கோருவதற்காக அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி அவர்கள் முன்மொழிய கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| ***இல*** | ***குத்தகைவிபரம்*** | *மாத வாடகை* | ***ஆகக் குறைந்த கேள்வித் தொகை*** | ***கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது)*** | ***கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது*** |
|---|---|---|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 56,100.00 | 1,000.00 | 1,500.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல – 06 | 1,500.00 | 66,100.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி மாட்டிறைச்சிக்கடை இல – 07 | 1,500.00 | 400,000.00 | 5,000.00 | 1,500.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி பன்றிறைச்சிக் கடை | 1,000.00 | 200,000.00 | 1,000.00 | 1,500.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை | …… | 121,200.00 | 1,000.00 | 1,500.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 3,750.00 | 933,900.00 | 10,000.00 | 1,500.00 |
| 07 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 3,750.00 | 142,850.00 | 1,000.00 | 1,500.00 |
| 08 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 3,750.00 | 585,600.00 | 10,000.00 | 1,500.00 |
| 09 | இறால்மடம் சந்தை | ……… | 35,200.00 | 1,000.00 | 1,500.00 |
| 10 | இறால்மடம் சந்தை கோழிக்கடை | 1,250.00 | 35,450.00 | 1,000.00 | 1,500.00 |
| 11 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 628,820.00 | 10,000.00 | 1,500.00 |
| 12 | கும்பலை சந்தைக்குள் அமைந்துள்ள மாட்டிறைச்சிக்கடை இல 01 | 2,750.00 | 761,340.00 | 10,000.00 | 1,500.00 |
| 13 | கும்பலை சந்தைக்குள் அமைந்துள்ள கோழிக்கடை இல 02 | 2,750.00 | 93,950.00 | 1,000.00 | 1,500.00 |
| 14 | கும்பலைச்சந்தை | …… | 402,200.00 | 5,000.00 | 1,500.00 |
| 15 | கும்பலைச்சந்தை வாகனத்தரிப்பிடம் | | 23,200.00 | 1,000.00 | 1,500.00 |
| 16 | கணேஸ்வரம் சந்தை | ……… | 69,900.00 | 1,000.00 | 1,500.00 |
| 17 | கணேஸ்வரம் சந்தைகோழிக் கடை | 1,000.00 | 61,700.00 | 1,000.00 | 1,500.00 |
| | **தெல்லிப்பளை உப அலுவலகம்** | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை | …….. | 71,500.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தைகோழிக் கடை | 1,050.00 | 93,500.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | கூத்தன்சீமாச் சந்தைகருவாட்டுக்கடை | 1,050.00 | 16,500.00 | 1,000.00 | 1,500.00 |
| 04 | கீரிமலை மரக்கறிச்சந்தை | ……… | 29,700.00 | 1,000.00 | 1,500.00 |
| 05 | வீமன்காமம் பொதுச்சந்தை | ………. | 550,700.00 | 5,000.00 | 1,500.00 |
| 06 | வீமன்காமம் பொதுச்சந்தை வாகனத்தரிப்பிடம் | | 130,850.00 | 1,000.00 | 1,500.00 |
| 07 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 1,498,800.00 | 10,000.00 | 1,500.00 |
| 08 | வீமன்காமம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 594,250.00 | 5,000.00 | 1,500.00 |
| 09 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 23,850.00 | 1,000.00 | 1,500.00 |
| 10 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 16,000.00 | 1,000.00 | 1,500.00 |
| | **மயிலிட்டி உப அலுவலகம்** | | | | |
| 01 | குரும்பசிட்டி சந்தை | ………. | 13,200.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | குரும்பசிட்டி கோழிக்கடை | 1,500.00 | 61,100.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | குரும்பசிட்டி மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 501,000.00 | 5,000.00 | 1,500.00 |
| | **காங்கேசன்துறை உப அலுவலகம்** | | | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | ………. | 77,100.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 1,200.00 | 85,450.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | காங்கேசன்துறை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,200.00 | 77,200.00 | 1,000.00 | 1,500.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.1 | 1,200.00 | 66,000.00 | 1,000.00 | 1,500.00 |
| 05 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 1,200.00 | 60,000.00 | 1,000.00 | 1,500.00 |

- கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினூடாக மேற்கொள்ளப்படவுள்ள "யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளக வீதிகளை புனரமைத்தல்" எனும் திட்டத்தினூடாக பின்வரும் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளமையால் அவற்றினை குறித்த அமைச்சினூடாக நடைமுறைப்படுத்துவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| SN | Name of the Road | GN Division No | Estimated Amount (Rs) |
|---|---|---|---|
| 1 | Construction of Thunnathai Road -Tellippalai | J/244 | 5,590,000.00 |
| 2 | Reconstruction of Tellippalai East lane | J/236 | 7,588,000.00 |
| 3 | Construction of Vilaveli Road | J/241 | 6,197,000.00 |
| 4 | Reconstruction of Murugan Kovil Road at Mavaikaladdy | J/225 | 5,771,000.00 |
| 5 | Construction of Maankollai vairavar kovil Road | J/233 | 6,375,000.00 |
| 6 | Construction of Puliyadikadu Road | J/253 | 3,658,000.00 |
| 7 | Construction of air port Cross Road | J/253 | 4,403,000.00 |
| 8 | Construction of Siththi Vinayakar School Road | J/253 | 4,429,000.00 |
| 9 | Construction of Weeralapalai Road | J/253 | 3,912,000.00 |
| 10 | Construction of Mavaikaladdy 2nd Right Lane 1st left lane Senthalupura Road | J/225 | 4,420,000.00 |
| 11 | Reconstruction of Tellippalai East Kurunthady amman Joint Road | J/236 | 3,800,000.00 |
| 12 | Construction of kadduvan Muththumari Amman Kovil Road | J/242 | 3,949,000.00 |
| 13 | Construction Kumara Kovil Road | J/235 | 8,630,000.00 |
| Total | | | 68,722,000.00 |

**தீர்மான இல :- 05/2025.09.18**
கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினூடாக மேற்கொள்ளப்படவுள்ள "யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளக வீதிகளை புனரமைத்தல்" எனும் திட்டத்தினூடாக பின்வரும் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளமையால் அவற்றினை குறித்த அமைச்சினூடாக நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி அவர்கள் முன்மொழிய கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| SN | Name of the Road | GN Division No | Estimated Amount (Rs) |
|---|---|---|---|
| 1 | Construction of Thunnathai Road -Tellippalai | J/244 | 5,590,000.00 |
| 2 | Reconstruction of Tellippalai East lane | J/236 | 7,588,000.00 |
| 3 | Construction of Vilaveli Road | J/241 | 6,197,000.00 |
| 4 | Reconstruction of Murugan Kovil Road at Mavaikaladdy | J/225 | 5,771,000.00 |
| 5 | Construction of Maankollai vairavar kovil Road | J/233 | 6,375,000.00 |
| 6 | Construction of Puliyadikadu Road | J/253 | 3,658,000.00 |
| 7 | Construction of air port Cross Road | J/253 | 4,403,000.00 |
| 8 | Construction of Siththi Vinayakar School Road | J/253 | 4,429,000.00 |
| 9 | Construction of Weeralapalai Road | J/253 | 3,912,000.00 |
| 10 | Construction of Mavaikaladdy 2nd Right Lane 1st left lane Senthalupura Road | J/225 | 4,420,000.00 |
| 11 | Reconstruction of Tellippalai East Kurunthady amman Joint Road | J/236 | 3,800,000.00 |
| 12 | Construction of kadduvan Muththumari Amman Kovil Road | J/242 | 3,949,000.00 |
| 13 | Construction Kumara Kovil Road | J/235 | 8,630,000.00 |
| Total | | | 68,722,000.00 |

- ✓ கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பிரதேச சபையின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட வீதிகளில் பெரும்பாலான வியாபாரிகள் மற்றும் வெளிமாவட்ட வியாபாரிகள் நடைபாதை வியாபாரத்தினை மேற்கொண்டு வருகின்றார்கள். இதனால் உள்நாட்டு வியாபாரிகள் பாதிக்கப்படுகின்றார்கள். இதனால் நடைபாதை வியாபாரங்கள் அனைத்தையும் தடை செய்யப்பட வேண்டும் என்ற பிரேரணை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன் அவர்கள் தனது பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவித்தார். வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட முக்கிய வீதிகளில் பலர் நடைபாதை வியாபாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் குறிப்பாக பிற மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகளும்

சனி, ஞாயிறு மற்றும் பண்டிகை நாட்களில் வியாபாரம் செய்யும் நோக்குடன் எமது பிரதேசங்களை குறிவைத்து வருகை தருகின்றனர். இதனால் எமது பிரதேசத்தைச் சேர்ந்த உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் வருமானத்திற்கும், வாழ்வாதாரத்திற்கும் வழியற்று வாழாதிருக்கின்றனர். இது மட்டுமின்றி பல வீதி விபத்துக்கள் இடம்பெறுவதோடு பாதசாரிகளின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைகின்றது. எனவே இதனை தவிர்ப்பதற்காக தான் இந்த பிரேரணையை முன்வைத்தேன் என்றும் தெரிவித்தார்.

***தீர்மான இல :- 06/2025.09.18***

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதான வீதிகளில் நடைபாதை வியாபாரங்களினை தடைசெய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- அனேக கௌரவ உறுப்பினர்கள் பிரதேசசபையினால் நடாத்தப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் எமக்கு தெரியப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்தார்கள்.
- கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் தமது வட்டாரத்தில் நடைபெற்ற அளவெட்டி மல்லாகம் இந்து மயானம் துப்பரவு செய்யப்படும் போது எமக்கு தெரியப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்தார். சபையில் நடைபெறும் அபிவிருத்தி திட்டங்கள் கௌரவ உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். கடந்த ஆண்டில் மாவட்ட கிராம அபிவிருத்தி நிதி மூலம் குறித்த மயானத்திற்கான அபிவிருத்தி வேலைகள் என்னால் மேற்கொள்ளப்பட்டது எனவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் சபையின் WhatsApp மூலம் தெரியப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மதூசன் எமது வட்டாரத்திலுள்ள மயானமும் மற்றும் அதற்கான பாதையும் துப்பரவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் மல்லாகத்தில் நடைபெறும் நடைபாதை வியாபாரிகளினை மல்லாகச்சந்தைக்கு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் வீதிகளில் நடைபெறும் சிறு வியாபாரிகளின் வியாபாரங்களை (கச்சான் விற்பனை போன்று) தடை செய்வது மனிதாபிமான அடிப்படையில் உகந்ததல்ல எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் சிறு வியாபாரிகளை சந்தையில் வியாபாரத்தினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி அதற்கு வரி அறவிடப்படமாட்டாது எனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி அவர்கள் பிள்ளையன் காடு இந்து மயான கொட்டகை புனரமைக்கப்பட வேண்டும் என்றும் அத்துடன் பிரதேசசபையின் அனைத்து மயானங்களும் புனரமைப்பு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் அனைத்து மயானங்களும் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி தோலகட்டியில் அரச காணி அமைந்துள்ளது என்றும் அக்காணியினை வயாவிளான் R.C பாடசாலைக்கு விளையாட்டு மைதானமாக பெற்றுத் தருமாறு தவிசாளர் அவர்களை கேட்டுக்கொண்டார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் அக்காணியினை தனியார் ஒருவர் ஆக்கிரமித்துள்ளார் என்றும் பிரதேச செயலாளரிடம் கோரி அதனை அடையாளப்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி முச்சக்கரவண்டிதரிப்பிடத்தினை ஒழுங்குபடுத்தி தருமாறு கௌரவ தவிசாளர் அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.
- கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் வலிகாமம் வடக்கில் பெரும்பாலான இடங்களில் திண்மக்கழிவுகள் போடப்பட்டு வருகின்றது அதற்கு

பொதுவான இடங்களில் கழிவு சேகரிக்கும் தொட்டிகளை வைத்து ஒரு விழிப்புணர்வினை மேற்கொண்டு அதனை செயற்படுத்த வேண்டும் எனவும் எமது பிரதேசத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளை எல்லா வட்டாரங்களிற்கும் சமனாக பங்கீடு செய்து அபிவிருத்தி செய்வது நன்று எனத் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் வட்டார உறுப்பினர்கள் அபிவிருத்தி திட்டங்களினை முன்னுரிமைப்படுத்தினால் அவ் அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மதூசன் அவர்கள் தமது வட்டாரத்திலுள்ள பொது நோக்கு மண்டபத்திற்குரிய காணி இன்னமும் துப்பரவு செய்யப்படவில்லை எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் துப்பரவு செய்து தரப்படும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் ஐயனார் குளத்திற்கு போகும் வெள்ளவாய்க்கால் துப்பரவு செய்யப்படவேண்டும் எனவும் வாய்க்கால் சுற்றி பற்றைகள் மூடிக் காணப்படுகின்றது என்றும் பற்றைகளையும் அகற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

- கௌரவ உப தவிசாளர் அவர்கள் மழைகாலம் அண்மிப்பதால் பிரதேசசபையின் எல்லைக்குள் காணப்படும் மதகுகள், வாய்க்கால்கள் துப்பரவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

✓ கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மல்லாகம் நீதிமன்ற வழக்குகளுக்கு வரும் பொதுமக்கள் போக்குவரத்தின்மையினால் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர். இவர்களின் போக்குவரத்தினை சீராக்குவதற்கு காங்கேசன்துறை வீதியினூடாக செல்லும் பேருந்துகளினை மல்லாகம் நீதிமன்றம் வரை வந்து செல்வதற்கு ஏதுவாக இலங்கை போக்குவரத்து சபை முகாமையாளரிடம் கோரி ஒழுங்குளை மேற்கொள்ள வேண்டுமென்ற பிரேரணை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் தனது பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவித்தார். நீதிமன்றத்திற்கு வரும் பொதுமக்களிற்கு போக்குவரத்து ஏற்பாட்டினை மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 07/2025.09.18**

மல்லாகம் நீதிமன்ற வழக்குகளுக்கு வரும் பொதுமக்களின் போக்குவரத்திற்கு காங்கேசன்துறை வீதிவழியாக போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளை மல்லாக நீதிமன்றம் வரை சென்று வர ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு முகாமையாளர் இலங்கை போக்குவரத்து சபையிடம் கோருவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ சபைநிதி – 2025 இன் மூலம் மல்லாகம் சந்தைக்கு பின்பக்க கதவினை (Gate) அமைப்பதற்கு கூறு விலை கோரி வேலையினை நிறைவேற்றுவதற்கு சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

| வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத்தொகை | வட்டார இலக்கம் |
|---|---|---|
| மல்லாகம் சந்தைக்கு பின்பக்க கதவு அமைத்தல் | 64576.00 | 20 |

**தீர்மான இல :- 08/2025.09.18**

மல்லாகம் சந்தை பின்பக்க கதவினை (Gate) கூறு விலை கோரி அமைப்பதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள்

முன்மொழிய செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத்தொகை | வட்டார இலக்கம் |
|---|---|---|
| மல்லாகம் சந்தைக்கு பின்பக்க கதவு அமைத்தல் | 64576.00 | 20 |

- 2025.09.08ம் திகதி நடைபெற்ற தொழில்நுட்ப சேவைகள் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் கும்பலைக்கும் அலுக்கை வீதிக்கும் இடையிலுள்ள வயல்வெளி வீதி இரு பக்கமும் பற்றையாக காணப்படுவதனால் அதனை துப்பரவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

  அதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் துப்பரவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் வீதி விளக்கினை பொருத்துவதற்கு வாகனம் இல்லை என்றால் தான் வாடகைக்கு வாகனத்தினை பெற்றுக்கொண்டால் சபையின் மின்னியலாளரினை கொண்டு வீதி விளக்கினை பொருத்தலாமா எனக் கேட்டார்.
- கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன் அவர்கள் 20ம் வட்டாரத்தின் அளவெட்டி மல்லாகத்திற்கு இடையில் காணப்படும் வெள்ளவாய்க்காலுக்குள் கழிவுகள் போடுகிறார்கள் அதனை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் எனவும் அளவெட்டி இந்து மயானத்திற்கு ஒரு கழிவுதொட்டி வைக்கவேண்டும் என்றும் கூறினார்.

  அதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் வெள்ளவாய்க்காலுக்குள் கழிவுகள் போடுவதை அவதானிப்பதாகவும் இந்து மயானங்களுக்கு கழிவுத்தொட்டிகள் வைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழு கூட்டத்தில் இந்து மயானங்களுக்கு அபிவிருத்திக் குழு அமைக்கலாம் என கலந்துரையாடினோம் அவ்வாறு அமைக்கலாமா என கேட்டார்

  அதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் அபிவிருத்திக் குழு அமைக்கலாம் அதனை பத்திரிகைகளில் பிரசுரித்து தான் அமைக்கலாம் அவ்வாறு செயற்படுத்துவோம் என தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர்களால் வீதி விளக்கு பொருத்துதல் சம்பந்தமாக கதைக்கப்பட்டது.
- கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்களால் வீதி விளக்கு பொருத்துவதற்குரிய பாதுகாப்பு உபகரணங்களை கொள்வனவு செய்து பொருத்துபவர்களுக்கு வழங்கவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

  அதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் அதனை கொள்வனவு செய்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

- அடுத்து 2025.09.08ம் திகதி நடைபெற்ற வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழு கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டது.

- 2025.09.10ம் திகதி நடைபெற்ற கலாச்சாரம் பண்பாட்டுகுழு, இளைஞர்கள் பெண்கள் சிறுவர்கள் பாதுகாப்பு குழு கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் அனைத்து மயானங்களுக்கும் மயான அபிவிருத்தி சபை அமைப்பது தொடர்பாகவும் அம்மாச்சி உணவகம் திறக்கப்படும் நேரம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் அம்மாச்சி உணவகம் ஒழுங்கான நேரத்துக்கு திறக்கப்படுவதும் இல்லை உணவுகளுக்கான விலைகளில் கட்டுப்பாடும் செய்யப்படுவதில்லை என்றும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் மேகலா திருஞானசம்பந்தர் அவர்கள் மதிய உணவின் விலை ரூபா 250 என காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது ஆனால் அவர்கள் ரூபா 350 க்கு விற்பனை செய்கிறார்கள் மற்றும் ஒரு குடும்பத்தினை சேர்ந்த உறுப்பினர்கள் தான் அங்கு வியாபாரத்தில் ஈடுபடுகின்றார்கள். அம்மாச்சி உணவகத்தில் உணவு தயாரித்து விற்பனை செய்பவர்கள் தேவை என விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்துமாறு தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டதாகவும் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் அடுத்த வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி கூட்டத்திற்கு முன் அம்மாச்சி உணவகத்தின் உணவு தயாரிப்பாளர்களுடனும் கீரிமலையில் அந்தியெட்டி கிரியை மேற்கொள்பவர்களுடன் கலந்துரையாடலினை மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் மேகலா திருஞானசம்பந்தர் அவர்கள் வித்தகபுரம் குடும்பநல வைத்தியசாலையில் உள்ள மலசலகூடம் பய ன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது என தெரிவித்தார்.

  கௌரவ தவிசாளர் அவர்கள் சுகாதார வைத்திய அதிகாரியிடம் திருத்தத்திற்கான கோரிக்கையினை சமர்ப்பிப்போம் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் எமது பிரதேச சபையில் நீண்டகாலமாக வெளிவாரி அடிப்படையில் தொழிலாளிகள் கடமையில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு குறைவாக காணப்படுகின்றது. வெளிவாரி அடிப்படையில் கடமையாற்றுபவர்களை நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

  கௌரவ தவிசாளர் அவர்கள் வெளிவாரி அடிப்படையில் கடமையாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கமுடியாது என்றும் தற்காலிக அடிப்படையில் வேலை செய்பவர்களுக்கு தான் நிரந்தர நியமனம் வழங்கமுடியும் என்றும் எனவே அவர்களை தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் குரும்பசிட்டி பொதுநோக்கு மண்டபம் தற்பொழுது பாவனையில் இல்லாமல் காணப்படுவதனால் அங்கு வௌவால்கள் இருக்கின்றது என்றும் அதனால் எமது இடத்தில் உள்ள இளைஞர்கள் சனசமூக நிலையத்தில் சில வகுப்புக்கள் நடாத்திவருகிறார்கள் குறிப்பாக மாலை நேரங்களில் கணனி வகுப்பு, நடன வகுப்பு, மாலை நேர வகுப்புக்கள், தையல் பயிற்சிகள் என்பன நடைபெறுகின்றன அதற்கு போதிய இடவசதி இல்லாமையால் குரும்பசிட்டி பொதுநோக்கு மண்டபத்தினை தந்துதவுமாறும் அதற்குரிய மின்கட்டணத்தினை தாங்கள் செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

  கௌரவ தவிசாளர் அவர்கள் பொதுநோக்கு மண்டபங்கள் மக்கள் பாவனைக்குரியதாகையால் அவ்வூர் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

இத்துடன் கூட்டமானது மதியம் 12.30 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

ஒப்பம்: **சி.சிவானந்தன்**
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை

ஒப்பம்: **சோ.சுகிர்தன்**
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை

தவிசாளர் அவர்களால் 16.10.2025 நடைபெற்ற கூட்டத்தில் சென்ற கூட்ட 18.09.2025 வரைவு அறிக்கையை முன்மொழிந்து வழிமொழியுமாறு கேட்டுக்கொண்ட போது கௌரவ உறுப்பினர்களால் பின்வரும் திருத்தங்கள் தெரிவிக்கப்பட்டன

- கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன் அவர்கள் (18.09.2025) நடைபெற்ற கூட்ட அறிக்கையில் வலிகாமம் வடக்கில் பெரும்பாலான இடங்களில் திண்மக்கழிவுகள் போடப்பட்டு வருகின்றது அதற்கு பொதுவான இடங்களில் கழிவு சேகரிக்கும் தொட்டிகளை வைத்து ஒரு விழிப்புணர்வினை மேற்கொண்டு அதனை செயற்படுத்த வேண்டும் எனவும் எமது பிரதேசத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளை எல்லா வட்டாரங்களிற்கும் சமனாக பங்கீடு செய்து அபிவிருத்தி செய்வது நன்று என்று தெரிவித்தேன் என்றும் கூறியிருந்தார்.
- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் (18.09.2025) நடைபெற்ற கூட்ட அறிக்கையில் பலாலியில் உள்ள இராணுவ வைத்தியசாலையின் கட்டுமான பணிகள் மீண்டும் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது என்று தெரிவித்தேன் என்றும் கூறியிருந்தார்.

- கௌரவ உறுப்பினர்கள் (18.09.2025) நடைபெற்ற கூட்ட அறிக்கையில் வீதி விளக்குகள் பொருத்துதல் வட்டார ரீதியில் சுழற்சி முறையில் நடைபெறுதல் வேண்டுமென தெரிவித்தார்கள் ஆனால் இந்த விடயம் 18.09.2025 வரைவு அறிக்கையில் காண்பிக்கப்படவில்லை என கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் தெரிவித்தார்.

மேற்படி திருத்தங்களுடன் புரட்டாதி மாதம் 18.09.2025 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் வழிமொழிய சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்: **சி.சிவானந்தன்**
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை

ஒப்பம்: **சோ.சுகிர்தன்**
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை

உண்மைப்பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.

**சிவகுமாரன் சிவானந்தன்**
செயலாளர்.
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை